சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08,

ந.க.எண்.7355 /அ5/2022 நாள். 20 .10.2022

பொருள்: சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மார்ச் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு - மாணவர்களது பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்- சார்பு

பார்வை: சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 020999/எச் 1/2022 நாள். 18.10.2022

-------

மேற்காண் பொருள் சார்பாக பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு திருத்தங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய ஆதார ஆவணங்களை முகப்பு கடிதத்துடன் 28.10.2022க்குள் **சென்னை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தான் நேரில் ஒப்படைக்க வேண்டும்.**

மார்ச் 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் பெயர்பட்டியல் தயார் செய்வது குறித்து அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் அனைத்து ஐயப்பாடுகளையும் நீக்கும் வகையில் மிகவும் தெள்ளத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அதனை நிவர்த்தி செய்திட ஏதுவாக இரண்டு கைபேசி எண்களும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காண் விவரங்களின் அடிப்படையில் மாணவர்களின் பெயர்பட்டியலினை எவ்வித தவறும்/விவரங்கள் விடுதல் இன்றியும் தயார் செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர் பெயர் பட்டியலில் தவறுகள்/திருத்தங்கள் ஏற்பட்டு மாற்றங்கள் செய்திட கோரிக்கை ஏதும் பெறப்படும் பட்சத்தில் சார்ந்த தலைமையாசிரியர்/முதல்வர் மீது விதிகளின்படி உரிய நடவடிக்கை தனியாக மேற்கொள்ளப்படும் என திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே தேர்வு சார்பான அனைத்துப் பணிகளிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி தவறுகள் இன்றி சிறப்பாக செய்து முடித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: பார்வையில் காணும் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

1. தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் அரசு/உதவி பெறும்/மெட்ரிகுலேசன் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளிகள், சென்னை மாவட்டம்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை) தென் சென்னை மற்றும் வட சென்னை
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) எழும்பூர் மற்றும் சைதாப்பேட்டை
4. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) திருவல்லிக்கேணி, சென்னை-05

நகல்

1. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், சென்னை-06
2. கோப்புக்கு